



மதுரை மாவட்டம் சோழவந்தான் ஸ்ரீசனிஸ்வரர் ஆலய
நிர்மாணம் (பிரதிஷ்டை) கும்பாபிஷேக குடமுழுக்கு
நீராட்டு விழா வைபவத்தின் நன் நாளில் (அதை)
நள ஆண்டு ஆனி மாதம் 20ம் தேதி ஞாயிற்றுகிழமை



(4-7-1976) அன்று தேவோற்பத்தி காண்டத்தில்
நவக்ரஹங்கள் உற்பத்தி வரலாறும், ஒன்பது
கிரஹங்களின் பலா பலன்களும் ஸ்தோத்திரங்களுடன்
கோளறு திருப்பதிகமும், அடங்கிய இலவச வெளியீடு.



From:

Meenakshi Raman
C/o Rani Furniture,
21. West Avani Moola St,
MADURAI–625001.

பேரன்புடைய பக்தர்களுக்கு,

ஹிந்துமதம் தழைத்தோங்க வேண்டும் என்கிற நோக்கத்தில் ஹிந்து தர்மத்தின் விளக்கம் உள்ள பல வெளியீடுகள் பலரால் அடியேனைக்காட்டிலும் பாண்டத்தியம் உள்ளவர்களும், வேதாந்திகளும், புலவர்களும், சாஸ்திர ரத்னுகரர்களும் பல நூல்கள் விற்பனைக்கு வெளியிட்டுள்ளார்கள்.

பல காரணங்களால் எல்லோராலும் வாங்கி பயன் படுத்த முடியாமல் இருக்கிறது. மேலும் அந்நிய நாட்டு உதவியுடன் மற்ற மதத்தின் நூல்கள் பெரும்பாலும் அடிக்கடி இலவச வெளியீடாக விநியோகம் செய்யப் படுவதை நாம் கண்ணுல் பார்க்கிறோம். மேற்கண்ட இந்நோக்கங்களை மனதில் கொண்டு அடியேன், முதல் வெளியீடாக பிரபஞ்ச தோற்றமும் அமைப்பும், காலத் துவமும் இரண்டாவதாக ஆலயவழிபாடுகளும் அவற்றின் உட்பொருளும் என்ற இருநூல்களும் வெளியிட்டதில் பல இடங்களிலிருந்தும் வெளிமாகாணத்திலிருந்தும் இவ் விரண்டு வெளியிடுகளை அனுப்பி வைக்குமாறு மிக சிரத் தையுடன் பல பக்தர்கள் கேட்டுள்ளார்கள். அடியேன் சக்தி அளவுக்கு எவ்வளவு இலவச பிரதிகள் வெயிடமுடி யுமோ அதுவரையிலும் செய்து இக்கடமையை பூர்த்தி செய்துள்ளேன்.

மூன்ருவது வெளியிடாக "நவக்கிரஹ தெய்வங்கள்" என்ற தலைப்புடன் இவ்வெளியீடும் அடுத்து ஆடி, 18ம் பெருக்கு, வரலக்ஷ்மி விரதம், காயத்திரி ஜபம், மற்றும் வரும் ஹிந்து தர்ம பண்டிகைகள் ஏன் கொண்டாட வேண்டும் என்பது, திரு அவதாரங்களின் வரலாற்றைக் கொண்டு விபரங்கள் அடங்கிய வெளியிடு வெளியிட ஆவல் கொண்டிருப்பதால் இதற்கு பக்தர்கள் ஆர்வமும், அன்பும் அளிக்குமாறு எல்லாம் வல்ல ஆதிபராசக்தியை மலரடிபணிந்து வேண்டிக்கொள்கிறேன்!

ஸ்வாமி

அறிமுகம்

க்ருஹதாறம், வித்யாதாறம், அன்னதாறம் இவை மஹாதாறம் எனப்படும். துர்பிக்ஷித்தில் அன்னதாறம் மிக உத்தம மஹாதாறம்.

அக்ஞாறம் மலந்த காலத்திலே க் ஞாற யக் ஞும் மிக மிகப் போற்றத்தக்க உத்த மோத்தம மஹாதாறம். இஹபர இன்பந்தரும் தாறமிது.

மறுபிறவிக்கும் தேடிவைக்கும் நிதி இது.
உனக்கு தெரிந்த வித்யையை நாலு பேருக்கு கழி!

இதனுல் நல்ல பயன் பெற்ருேம்–பெறுகிருேம் என்பது இல்லை ஆனுல் பின் ஸந்ததிக்கு இது பொக்கிஷம். ஆஸ்திக உலக பக்திக்கும், பரோபகாரத்திற்கு கடமைப் பட்டிருக்கிறது. எவரையும் உலகம் இகழும், புகழும், இவ்விரண்டும் வாக்கு அமிர்தம் என்று பணி செய்து, சோர்வை அகற்றி, உஸ்தாக மூட்ட

" ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும் "

[சிலப்பதிகாரம்]

ஆன்மீக விதிகளுடன் நீடித்த தொடர்பும், பிணைப்பும், ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. உடலினுலும், மனதி ஞலும் செய்யும் செய்கை, நடத்தை ஆகிய ஒவ்வொன் றும் அதற்குரிய பிரதி பலனை ஏற்படுத்துகின்றன.

மதுரையம்பதியில் அருள்மிகு மீனுக்ஷி சுந்தரேஸ்வரர் திருக்கலியாண தினத்தன்று [ராக்ஷக்ஷஸ ஞூ பங்குனி 30ஆம் நாள், 12-4-'76] முதன் முதலில் எழுத்தை கண்டு பிடித்த தமது ஒரு தந்தத்தையே எழுத்தாணி யாகக் கொண்டு எழுதிய வருடய ஸந்நதியில் முதல் வெளியிடாக " பிரபஞ்சத்தோற்றமும், அமைப்பும், காலத்தத்துவமும் ".

இரண்டாவதாக " ஆலய வழிபாட்டு முறைகளும் அவற்றின் உட்பொருளும் " என்ற இரு நூல்களும் கஜேந்திரனுலேயே பொது மக்களுக்கு இலவசமாகவழங் கப்பட்டது.

மூன்ருவது வெளியிடு எதைப்பற்றி வெளியிடுவது என்று சிந்தையில் இருக்கும் போது பிரபஞ்சத்தோற்றத்தில் நவக்கிரஹ உற்சவம் அவர்களின் ஸ்தோத்ரம் [பலா பலன்கள் ஜோதிட பிரகாரம்] விவரங்கள் அடங்கிய நூலே, அடியேனுக்கு ஆதிபராசக்தியின் அருளால் மதுரை ஜில்லா சோழவந்தான் மஹா ஜனங்கள், பக்தர்கள் கூடி நிர்மாணிக்கப்பட்ட ஸ்ரீசனீஸ்வர பகவான் ஆலய கும்பாபிஷேகத்தினத்தன்று அனல நள ஆண்டு ஆனித்திங்கள் 21தேதி [4—7—'76] வெளியிட சந்தர்ப்பம் அளித்தவர்களுக்கு ஸ்ரீசனிஸ்வர பகவானே ஸகல க்ஷேமங்களையும் கொடுக்கும்படி பிராத்தனை செய்கிறேன்.

" முனிவர்கள் தேவரேழு மூர்த்திகள் முதலானோர்கள்
மனிதர்கள் சகல வாழ்வின் மகிமையை தல்லாலுண்டோ
கனிவுள தெய்வம் நீயே கதிர்சேயே காகமெனும்
சனியனே உனைத்துதிப்பேன் – தமியனேற்கருள்
செய்வாயே "

சமர்ப்பணம்

மாதா, பிதா, குரு என்ற வாக்யப்படி இவ்வெளியிடு எனது மாதா, பிதா தஞ்சை ஜில்லா சீர்காழியில் உள்ள லக்ஷ்மி வைத்தியநாதய்யர் [ரிடையர்ட் லோகல் புண்ட் ஆடிட்டர்] ஸாதபிஷேங்கள் கழிந்து ஸ்ரீ ஆதிபராசக்தியின் திருவடியடைந்த ஸ்ரீபிதா மஹர்களுக்கு அர்ப்பணம் செய்கிறேன்.

குருர் பிரும்மா குருர் விஷ்ணு குருர் தேவோ மஹேச்வர
குருஸ்ஸாக்ஷரத் பரம் பிரும்ப தஸ்மை ஸ்ரீ குருவே நம."

ஸ்ரீ சங்கர பகவத் பாதாஸ்
ஸாஷத் சிஷ்ய பரம்பரை
குருவுகளுடை பாதங்களுக்கு
மலரடி பணிகின்றேன்.

சொல்லும், பொருளும் இணைந்திருப்பதைப் போல் இனைபிரியாமல் இருக்கும் உமா சங்கர்களின் பாதங்களில் இதை பணிவுடன் சமர்ப்பிக்கிறேன்.

" சர்வேஜனு; ஸுகினோ பவந்து.

ஓம் தத்ஸத்.

பதிப்புரிமை இல்லை:-

யாவர் எத்தனை பிரதிகள் வேண்டுமானாலும் அனுமதியுடன் அச்சிட்டு இலவசமாக விநியோக பிரசாரம் செய்யலாம். ஆனால் இதில் [Advertisements] விளம்பரங்கள் இருத்தல் கூடாது.

ஆலயத்தில் என்றென்றும் கம்பீரமாக துவஜஸ்தம்பம் காண்பது போல் இந்துமதம் தழைத்தோங்க வழியாய் இருக்கவும் சதுர் வர்ணத்தாரும் க்ஷேமமாயிருக்கவும் சமூக ஒற்றுமைக்கும் எல்லோரும் ஏகோபித்த மனத்துடன் கூடியிருக்க இப்பிரதியை நன்கு படித்து உணர்ந்தபின் தமது ஆப்த நண்பர்களுக்கும் கொடுத்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அவதாரிகை

உலகில் இறைவன் விசித்திரமான பல ஸ்ருஷ்டிகளைச் செய்கிறார். இயற்கையாகச் சில அம்சங்களை உண்டாக்கி செயற்கையால் சிலவகைகளை கொண்டு நன்மை பெற பொருள்களையும் தந்தருள்கிறார்.

தாய் வயிற்றிலிருந்து பிறந்தபடியே இருக்க இயற்கையே இடம் தருவதில்லை. செயற்கையால் மாறுதல் சேர்ந்தால் தான் இயற்கையும் பிரகாசிக்கிறது.

உதாரணமாக, இயற்கையிலிருந்து வரும் தங்கம், வைரம், கடலிலிருந்து முத்து, பவளம் அப்படியேஉபயோகபடலாயக்கில்லாமல் செயற்கையால் மெருகு கொடுத்தால்தான் அழகை பிரதிபலிக்கச் செய்வது போல் மனிதன் பிறக்கும்பொழுது தனக்கு காரணமாய் இருந்த பீஜதோஷம், கர்ப்ப தோஷம், மற்றும் கர்ம வினைப்பயனுடன் பிறக்கின்றான். இத்தோஷங்களை நீக்க வேதம் கூறிய கர்மாக்களால் தான் முடியும்.

ஆதிகாலத்தில் ராஜாக்களால் கட்டப்பட்ட கோவில்களில் நவக்கிரஹம் பிரதிஷ்டை செய்து இருக்க மாட்டார்கள். காரணம் சில இடங்களில் ராஜாக்களுக்கு கோவிலில்தான் பட்டம் கட்டுவார்கள். ஆனதால் நவக்கிரஹ பிரதிஷ்டை இருக்காது. ஆனால் ஸ்ரீ சூரியபகவான் மாத்திரம் தனியாக இருக்கும்.

இன்னும் சில கோவில்களில் நவக்கிரஹ பிரதிஷ்டைக்கு பதிலாக துவஜஸ்தம்பம் அருகில் 9 தீபக்குழிகளில் நவக்கிரஹ ஆவாகனம் செய்து விளக்கு ஏற்றி வருவார்கள். உதாரணமாக திருச்சி ஜில்லா திருப்பைத்சலி என்ற ஊரில் 9 குழிகளில் நவக்கிரஹங்களை ஆவாக்கிரணம் செய்து தீபம் ஏற்றி வழிபட்டு வருகின்றார்கள்.

நவக்கிரக தெய்வங்கள்

இரவி சங்கர னீசுரி திங்கள் சே
யினிய கந்தனி திருமால் புதன்
குருவயன் சுரர் கோன் வெள்ளி சனியியமன்
குலவுராகு குறி பத்திர காளியா
மருவு சித்திரபுத்திரன் கேதுவாம்
வானவர் முனிவோர சீமற்று நா
நாளரி முதற்கிரகத்தாற் பரமசிவ
பண்ட பிண்டம் படைத்தளித்தாற்றுமே

''ஆரோக்யம் பரததாது நோ தினகர:
சந்த்ரோ யஸோ நிர்மலம்
பூதிம் பூமி ஸீத: ஸீதாம் ஸீதனய:
பரஜ் ஞாம் குருர் கெளரவம்
காவய: கோமள வாக் விலாஸமதுலம்
மந்தோ முதம் ஸர்வதா
ராஹீர் பாஹீபலம் விரோத பீமனம்
கேது: குலஸ் யோன்னதிம்.

விளக்கம்: சூரியன் முதல் ஒன்பது கிரஹங்களின் நல்ல பயனே அடையலம்.

ஸீர்யன் ஆரோக்கியத்தையும், கீர்த்தியையும், சந்திரன் ஐச்வர்யத்தையும், அங்காரகன் (செவ்வாய்) நல்லபுத்தியையும், புதன் படிப்பையும், மதிப்பையும், வியாழன் (குருபகவான்) இனிய பேசும் திறத்தையும், சுக்ரன் எப்பொழுதும் ஸந்தோஷத்தையும், சனீஸ்வரன் புஜபலத்தையும், சத்ரு நிக்ரஹத்தை ராகுவும், குலத்தின் அபிவிருத்தியை கேதுவின் மூலமும் அடையலாம்.

அவர் அவர்கள் கர்மங்களுக்குத் தக்கவாறு நவக்ரஹங்கள் பலனே அளிக்கின்றன இவர்களே நாம் ஸ்துதிஞலோ, பூஜையினலோ வழிபட்டால் கெட்ட பயன்களே அகற்றி நல்ல பயன்களே அருளச் செய்வார்கள்.

ஜாதக ரீதியாக க்ரஹ தோஷமுள்ளவர்கள் கிரஹதாச, புத்தியில் அந்த கிரஹங்களின் ஸ்தோத்திரத்தையும், கவசத்தையும், ஸகஸ்ரநாம பாரயணம் செய்தால் நல்ல பலன்களேத் தரும் என்று முனிவர்கள் கருணே கூர்ந்து அருளியிருக்கின்றனர்

ஞாயிறன்று சூர்யன், ராகு, கேது. திங்கள் சந்திரன், செவ்வாய், (அங்காரங்கள்) (செவ்வாய்) புதன், வியாழன், (குரு) வெள்ளிக்கிழமை, சுக்ரன், சனிக்கிழமை சனீஸ்வரன் ஸ்தோத்திரம், கவசம், சதநாமம் இவைகளே பாரயணம் செய்தால் கோசா ரீதியாய் (அன்று அன்று ஏற்படும் தோஷங்கள் விலகி எல்லா க்ஷேமங்களும் உண்டாகும்.

கிரேதா யுகத்தில் சுவர்க்க லோகத்தின் கண் தேவேந்திரன் ஆடல் பாடலைக்கேட்டு பெண்மயில் மூழ்கியிருக்கையில், அச்சமயத்தில் அவ்விடம் வந்த வியாழ பகவானையும் (குரு) வழிபடாமல் அவமதித்த குற்றத்தால் இந்திரனின் செல்வம் குன்றி அந்நாட்டில் பஞ்சம் பரவியது. குருவும் திரும்பிச்சென்று விட்டதாக திருவிளையாடற் புராணத்தில் ''இந்திரன் பழிதீர்த்த படலம் அத்தியாயத்தில் உள்ளது''.

திருஷ்டம், அதிருஷ்டம், திருஷ்டாதிருஷ்டம் எனக்கர்மா மூவகைப்படும்.

அவருக்கு அதிருஷ்டம் நமக்கு அதிருஷ்டம் இல்லை என சொல் வழங்குகிறது.

ஸ்நாநத்தால் உடல் சுத்தமாகி வியர்வை இல்லாமல் இருப்பது ஸ்நாநம் என்பது திருஷ்ட பலன். தானம், ஹோமம், வழிபாடு முதலியன மறு உலகிலும், மறு பிறவியிலுமே பலனைத் தருவதால் ஸ்நாந ஹோமாதிகள் அதிருஷ்ட பலன்.

கர்மாவை செய்வதால் உண்டாகும் மறுபிறவி, மறுஉலகம் இன்பம் தருவதால் திருஷ்டாதிருஷ்ட பலன். தன் கர்மாவினுல் பகவானை அர்ச்சிக்கும் மனிதன் ஸித்தி அடைகிருன் என்று கீதையில் பகவான் கூறுகிருர்.

கண்ணுக்குத் தெரியாத விஷயங்களை எடுத்துக்காட்டுவது வேதம். இதன் கருத்தை விளக்குவது ஸூத்ரம் மஹரிஷிகளால் எழுதப் பட்டிருக்கிறது. இவைகளை எல்லோராலும் வாங்கிப் படிக்க முடியாது. இதன் காரணமாக எளிய நடையில் சுருக்கமாக உள்ள இந்நூலை ஒவ்வொருவரும் படித்து பயன் பெற்று, பலரையும் படிக்குமாறு செய்தால் மற்றும் பல இத்தகைய நூல்களை வெளியிட அடியேனுக்கு ஊக்கமும், ஆதி பராசக்தியின் மஹாஜ்யோதி ஸ்வரூபியான அகண்ட ஸச்சிதானந்த பரப்ரும்மத்தில் என்னை ஐக்கியப் படுத்தும்.

நவக்கிரகமென்பது:-

சூரியன், சந்திரன், அங்காரகன் (செவ்வாய்) புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது, என்று ஒன்பதும், மலையாள பாகத்தில் குளிகன் என்று ஒன்றும் சேர்த்துக்கொள்வார்கள். அதேபோல் ஆங்கில ஜோதிடத்திலும் நெப்டியன், யுரானேஸ், புளுட்டோ என்றும் பல கிரஹங்கள் வானவெளியில் இருந்தாலும் அவைகளுக்கும் மானிடர் வாழ்க்கைக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை. சூரியன் முதல் கேது உட்பட ஒன்பது கிரஹங்களும் நமது வாழ்க்கையை அதனுடைய தன்மைக்கு ஏற்றவாறு பாதிக்கின்றன.

நவக்கிரக உற்பவம்

"இரவி சங்கரனீச்சுரி திங்கள் சேய்
இனிய கந்தனிசை திருமால் புதன்
குருவயன்சுரர் கோன் வெள்ளி சுன்னமென்
குலவி ராகுக் குறிப்பத்ர காளியாம்
மருவு சித்தரா புத்திரன் கேதுவாம்
வானவர் முனிவோராகி மற்று நா
ளரி முதற் கிரகத்தர் பரமசிவ
னண்ட பிண்டம் படைத்தளித் தாற்றுமே!

இச்செய்யுள்படி சிவபெருமான் சூரியனாகவும், சக்தியே சந்திரனாகவும், சிவசுப்பிரமணியக் கடவுளே அங்காரனாகவும் (செவ்வாய்) திருமாலே (விஷ்ணுவே) புதனாகவும், பிரம்ம தேவனே குருவாகவும் (பிரஹஸ்பதி) இந்திரனே சுக்கிரனாகவும், எமதர்மராஜாவே சனீஸ்வரனுமவும், பத்திரகாளியே இராகுவாகவும், சித்ரகுப்தனே கேது வாகவும், இருப்பதாக கருத வேண்டியிருக்கிறது.

சூரிய பகவான்

காசியப கோத்திரரும் அததியின் பிள்ளையுமான கலிங்க நாட்டினர் ஒரு கையில் தாமரை மற்றோர் கை அபயம் கொண்டவர் சிந்தூர ஆடையும், சந்தன மாணிக்கமாலை அணிந்து செந்நிறக்கொடியின் கீழ்7 குதிரைகள் பூட்டிய தேரில் அமர்ந்து மேருவை வலம் வருபவர்.

நவக்கிரகங்களில் நடுவில் கிழக்கு முகமாக வட்ட வடிவத்தில் வீற்றிருப்பவர். காலத்தையே ஸ்வரூபமாக உடையவர். அக்னியை வழிபட்டால் இவருக்கு மகிழ்ச்சி.

ஜோதிட பிரகாரம்

சூரியன் ஆண்மை, தாமிர சிவப்பு நிறம் வேதாந்ததில் விருப்பம், க்ஷத்திரிய குணங்கள், தந்தைக்கு காரகன், அரசியல் சக்தியை குறிப்பவர், பித்த குணம், ராஜ சபை, நெருப்பு; என இருப்பிடங்கள்

ஒவ்வொரு ராசியிலும் ஒவ்வொரு மாதம் சஞ்சரிக்கின்றார். பிதுர்காரகன் சிம்மராசி, சொந்த வீடு மேஷராசியில் 10° உச்சம். ஜாதகத்தில் சூரியன் உச்சனாக இருந்தால் படிப்புள்ளவர்களாகவும், பக்திமான்களாகவும் ·லவான்களாகவும் இருப்பவர்கள். சூரிய திசைக்கு சாந்தி ஸ்ரீவால்மிகி ராமாயணம் பாலகாண்டம் 43வது சர்க்கம் கங்காவதார பாரயணமாகும் சூரியனுக்கு கிரகபாஷை சமஸ்கிருதம், தெலுங்கு.

சூரியன் கிரக நிறம் சிவப்பு
,, வடிவம் சமன்
,, கிரக பிணி பித்தம் லிங்கம்-ஆண்
,, கிரக திக்கு நடு
,, கிரக ஜாதி க்ஷத்திரியர்
,, கிரக குணம் குரூரர்
,, கிரக வஸ்திரம் சிவப்பு
,, கிரக ரத்தினம் மாணிக்கம்
,, கிரக தான்யம் கோதுமை
,, கிரக புஷ்பம் செந்தாமரை
,, கிரக சமித்து எருக்கு
,, கிரக தேவதை சிவன்
,, கிரக வாகனம் மயில், தேர்
,, கிரக சுவை காரம்
,, கிரக உலோகம் தாம்பிரம்

சூரிய பகவான் வணக்கம்

''காசினி யிருளை நீக்குங் கதிரொளியாகி யெங்கும்
பூசனை யுலகோர் போற்றப் புசிப்போடு சுகத்தை நல்கும்
வாசியேழுடைய தேர் மேல் மகாகிரி வலமாய் வந்த
தேசிகா வெனைரட்சிப்பாய் செங்கதிரவனே போற்றி!

பாஸ்வான் காஸ்ய பகோத்ர ஜோர் கஜஸ மித்ஹஜ
ஸிம் ஹாதி நாதொரு வ ண:

மௌமேஜ்யேந்து ஸீஹ்ருத்வ்ரஜயஸ
ஸ்த்தான ஸ்த்திதௌ ஸோபன:

ஆயுர் ஜென்ம களத்ரகோவ பீபல:
காளிங்க நாதோ மஹான்

மத்யே வர்துல மண்டல ஸ்த்தியுத:
குர்யாத் ஸதா மங்களம்.

சூரிய பகவானை வழிபட்டால் ஆரோக்யம், ஆயுள், சத்ருபயம் நீங்கும், வியாபார, உத்யோக லாபம் ஏற்படும்.

ஐப்பசி மாதத்தில் பிறந்தவர்களுக்கு சூரியன் நீசகை இருக்கும் இந்த தோஷமும் விலகும்.

குறிப்பு:- காலையில் சூரியன் உதயமாகி 7-30 மணிக்குள் 35 சூரியனுடைய கிரஹணங்களை ஒரு நிமிடம் பார்த்தால் கண்ணுக்கு நல்லது. 35; 40 வயது உள்ளவர்கள் தினமும் காலையில் 7-30 மணிக்குள் சூரியனை ஒவ்வொரு கண்ணை மூடிக்கொண்டு 1 நிமிடம் வரை பார்த்து பிறகு இரண்டு கண்ணையும் பார்த்தால் வெள்ளஎழுத்து என்பது வராமல் தடுக்கலாம்.

சந்திர பகவான்

அத்திரி கோத்திரமும் அத்திரியன் பிள்ளையுமான யாமுன நாட்டினர் கையில் கதையையும், அபயமும் கொண்டவர். வெள்ளரசையும், வெண் பூ முத்துமாலை அணிந்தவரும் வெண் கொடையின் கீழ் வெண்கொடை பூட்டிய தேரில் அமர்ந்து மேருவை வலம் வருபவர். சூரியனுக்கு தென்கிழக்கில் சதுர மான மண்டலத்தில் ஸ்படிக நிறப்துடன் கிழக்கு முகமாக வீற்றி ருப்பவர். ஜல தேவதைகளையும், பார்வதியையும் வழிபட்டால் இவருக்கு மகிழ்ச்சி.

ஜோதிட பிரகாரம்

சந்திரன் பெண்மைக்குணம் உள்ளவராயும், வெள்ளை நிறம் வளர்பிறையில் நல்லதையும் தேய்பிறையில் கெடுதலையும் செய் பவர். மனதையும் தாயையும் (மனோகரன், மாத்ருகாரகன்) எனப்படுவர். இவர் இருப்பிடங்கள், ஸ்திரீகள், மாலுமிகள், ஜலம், மீனவர், பிடிவாதம், காதல், சாந்தம் கொண்டவர்.

ஒருவருடைய புகழ் பொறுப்புகள், தாய்மனம் குறிப்பிடுபவர். ஒவ்வொரு ராசியிலும் $2\frac{1}{4}$ நாள் சஞ்சரிக்கின்றார்.

மாதுர்காரகன், கடக ராசி, ரிஷப ராசியில் 13 உச்சம், ஜாத கத்தில் சந்திரன் உச்சனாக இருந்தால், செல்வந்தர், கல்வி அறிவு, விடாமுயற்சி உள்ளவர்களாக இருப்பார்கள். சந்திர திசைக்கு சாந்தி வால்மீகி ராமாயணம் சுந்தர காண்டம் 5வது சர்க்கம் சந்திரோதய பாராயணமாகும்.

சந்திரனுக்கு கிரக	பாஷை	தமிழ்
,,	நிறம்	வெள்ளை
,,	வடிவம்	குறியர்
,,	லிங்கம்	பெண்
,,	பிணி	சேத்துமம்
,,	திக்கு	தென்கிழக்கு
,,	ஜாதி	வைசியன்
,,	குணம்	சௌமியர்
,,	வஸ்திரம்	வெள்ளை
,,	ரத்தினம்	முத்து
,,	தான்யம்	நெல்
,,	புஷ்பம்	வெள்ளலரி
,,	சமித்து	முறுக்கு
,,	தேவதை	பார்வதி
,,	வாகனம்	முத்து விமானம்
,,	சுவை	தித்திப்பு
,,	உலோகம்	ஈயம்

சந்திர பகவான் வணக்கம்

அலைகடல் தனினின்று மன்று வந்துதித்தபோது
கலைவளர் திங்களாகிக் கடவுளரெவரு மேத்துஞ்சிலை
துதறுமையாள் பங்கன் செஞ்சடைப்பிறையாய் மேரு
மலைவலமாக வந்த மதியமே போற்றி போற்றி

சந்திர; கர்கடகேஸ்வர ஸ்ரீதருசிஸ்
சாத்ரேய கோத்ரோத்பவ :
சாக்னேயே சதுரஸ்ர மண்டல கத
த்ர்யாயு : ஸ்த்திதி க்ரௌர்யவான்
நிர்வைரி புதஸுர்ய மிகாமகஜா
பூஜாப்ரஸன்ன : ஶசி
ஸ்வாமி யாமுனபஸ்ச கிம்வீகஸ்மித்
குர்யாத் ஸ்தா மங்களம் ! !

சந்திர பகவானை வழிபட்டால் க்ஷயம், வலிப்பு, குஷ்டம், உபத்திரவங்கள், ஸ்ரீ அம்பாளின் கோபம் நீங்கும். நிச்சகை வோ தோஷம் இருந்தால் ஆஸ்தமா சித்தப்ரம்ம் இருக்கக் கூடும்.

செவ்வாய் (அங்காரக பகவான்)

பாரத்துவாஜ கோத்திரும், பூமியன் புத்திரருமான அவந்தி நாட்டானவர் நான்கு கைகளிலும் வேல், சூலம், கதை, கடகம் கொண்டவர். சிவந்த ஆடையும், செந்நிறப் பூவையும், பவளத்தையும் அணிந்து 8 சிவந்த ஆடுகள் பூட்டிய தேரில் அமர்ந்து மேருவை வலம் வருபவர். சூரியனுக்கு தெற்கில் திரிகோண மண்டலத்தில் செஞ்சந்தன மர பிம்பத்தில் தெற்குமுகமாக வீற்றிருப்பவர்.

பூமா தேவியையும், ஸ்ரீ முருகனையும் வழிபட்டால் இவருக்கு மகிழ்ச்சி.

ஜோதிட பிராகாரம்:

அங்காரகன் (செவ்வாய்) ஆண்மைக்குணம் பொருந்திய வராயும், இரத்த சிவப்பு நிறம் உடையவராயும், கொடிய தன்மையுடையவராயும் பேசுந்திரன் உள்ளவராயும் சகோதர காரன்கள் ராணுவ திறமையுள்ளவர்கள், தூதுவர்கள், பிரசங் கிகள். இவர்களுக்கு இக்கிரஹத்தின் சுப ஆதிபத்யம் இருக்கும் வீடு, மனை, நிலம், துணி நெய்தல், விமானம் ஓட்டி உள்ள வர்களாகவும், ஆதிக்கம் உண்டு.

ஒவ்வொரு ராசியிலும் $1\frac{1}{2}$ மாதம் சஞ்சரிப்பார். சகோதர காரகன். மேஷமும், விருச்சிகமும் ராசியும், சொந்தவீடு மகர ராசியில் 28° உச்சம். ஜாதகத்தில் செவ்வாய் உச்சனாக இருந்தால் புகழ் பெற்றவர்களாகவும், ஊக்கமும், ஆர்வமும்,

தீவிர தன்னம்பிக்கையும் ராஜபோக வசதி கொண்டிருப்பார்கள். செவ்வாய் திசைக்கு சாந்தி வால்மீகி ராமாயணம் பாலகாண்டம் 36, 37வது சர்க்கங்களில் வரும் குமார ஜனன

பாராயணமாகும். செவ்வாய்க்கு கிரக பாஷை மந்திரம்

,,	நிறம்	சிவப்பு
,,	வடிவம்	குறியர்
,,	லிங்கம்	ஆண்
,,	பிணி	பித்தம்
,,	திக்கு	தெற்கு
,,	ஜாதி	க்ஷத்திரியன்
,,	குணம்	குருரர்
,,	வஸ்திரம்	சிவப்பு
,,	ரத்தினம்	பவளம்
,,	தான்யம்	துவரை
,,	புஷ்பம்	சண்பகம்
,,	சமித்து	கருங்காலி
,,	தேவதை	ஸ்ரீ சுப்பிரமணியர்
,,	வாகனம்	அன்னம்
,,	சுவை	துவர்ப்பு
,,	உலோகம்	செம்பு

ஸ்ரீ செவ்வாய் பகவான் வணக்கம்:

வசன நற்றைரியத்தோடு மன்னவர் சபையில்
வார்த்தை புஜபல பராக்கிரமங்கள் போர்தனில்
வெற்றி யாண்மை நிஜமுடனவரவர்க்கு நீணிலந்தனி
லளக்குங் குசனில மகனுஞ் செவ்வாய் குறைகழல்
போற்றி போற்றி !

பௌமோ தக்ஷிணத்ருக் த்ரிகோண நிலயோ/
பவந்தீஸ்வரோவ ஜாளிபோ
குர்வர் கேந்து ஸுஹ்ருச்ச காதிரஸமித்
விந்த்ஸேவரோ ரக்தபா :
உச்சஸ்தோ ந்ருபயோகதோ ஹ்யுபசயே
துஷ்ட: குமாரார் சயா
பாரத்வாஜா குலோத்பவோ புதரிபு :
குர்யாத் ஸதா மங்களம் ! !

செவ்வாய் பகவானை வழிபட்டால் குலதெய்வத்தின் கோபம் பங்காளிகளின் எதிர்ப்பு, மனஸ்தாபம் ரகததோஷம் விலகும். பூமி, வீடு, வியாபார லாபம், கடன் நிச்சயம் நீங்கும்.

ஸ்ரீ புத பகவான்:

அத்திரி கோத்திரரும் சந்திரனின் புத்திரருமான மகத நாட்டினர் நான்கு கையிலும் கத்தி, கேடயம், கதை, வர ஹஸ்தங்கள் கொண்டவர். மஞ்சள் குங்கும் நிறைவுடையுவர்.

மஞ்சளாடை, மலர் பூச்சுடன் மரகத மணிமாலே அணிந்து நான்கு சிங்கங்கள் பூண்ட தேரில் மஞ்சள் நிறக் கொடியின் கீழ் அமர்ந்து மேருவை வலம் வருபவர். சூரியனுக்கு வட கிழக்கில் பாண வடிவான மண்டலத்தில் தங்க பிரதிமையாக வடக்கு முகமாக இருப்பவர். திருமாலே வழிபட இவருக்கு மகிழ்சி.

ஜோதிட பிரகாரம்:

புதன் சாதுத் தன்மை பொருந்திய அலி கிரகம். அறிவுத் திறம், பேச்சு தன்மை, நரம்பு தளர்ச்சி, படிப்பும் சுப கிரகங் களோடு சேர்ந்துயிருக்கும்போது நல்லதை செய்பவர்.

ஒவ்வொரு ராசியிலும் ஒரு மாத காலம் சஞ்சரிப்பவர். மாதுல காரகன் மிதுனமும், கன்னியும் சொந்த வீடு. கன்னி யில் 15° உச்சம். ஜாதகத்தில் புதன் உச்சனுக இருந்தால் படிப்பில் மிகுந்தவராகவும் எப்போதும் உற்சாகம் மிகுந்து பிற ரால் கௌரவிக்கப்பட்டும், அதிர்ஷ்டம் உள்ளவர்களாகவும் இருப்பார்கள். புத திசைக்கு சாந்தி வால்மிகி ராமாயணம் யுத்த காண்டம் 35 வது சர்க்கம் ராமவருணனைப் பாராயணமாகும்.

புதனுக்கு கிரக	பாஷை	ஜோதிஷம்
,,	நிறம்	பச்சை
,,	வடிவம்	நெடியர்
,,	லிங்கம்	அலி
,,	பிணி	வாதம்
,,	திக்கு	வடகிழக்கு
,,	ஜாதி	வைசியர்
,,	குணம்	சௌமியர்
,,	வஸ்திரம்	பட்டு
,,	ரத்தினம்	பச்சை, மரகதம்
,,	தான்யம்	பச்சை பயிறு
,,	புஷ்பம்	வெண்காந்தன்
,,	சமித்து	நாயுருவி
,,	தேவதை	விஷ்ணு
,,	வாகனம்	குதிரை
,,	சுவை	உப்பு
,,	உலோகம்	பித்தளே

ஸ்ரீ புதபகவான் வணக்கம்:

மதனனூன் முதல்நான்கு மறைபுகழ் கல்வி ஞானம்,
விதமுடன வரவர்க்கு விஞ்சைகளருள் வோன்றியங்கள்,
சுதன்கன பசுவுபாக்கியஞ் சுகம்பல கொடுக்கவல்லன்,
புதன் கவிப்புலவன் சீர்மால் பொன்னடி போற்றி போற்றி.

லௌமயஸ்சா திரிகுலோத்பவோ
ஸத்ருஸ்ச பூர்வாஸ்வான ஹுமருசே
பாணுக்கு தௌ மண்டலே
மித்ரம் பாஸ்கர காவ்யயோ: ஸ்க்திமிதோ
கன்யாயுக் மபதி: ஸுபோவஸுபஸஹ
ஸ்த்தியா ஸுயோ ஸோ பவன:
வித்யாகாரக விஷ்ணுதைவத யுத:
குர்யாத் ஸதா மங்களம்!!

ஸ்ரீ புதபகவானை வழிபட்டால், நீசனுகவோ, தோஷமுள்ள வனுகவோ இரிந்தால், விஷ்ணு கோபம், குழந்தைகள் சாபம் இந்திரிய பலம்குறைவு உஷ்ண சம்பந்தமான வியாதி, நல்ல படிப்பு, புத்தி வலிப்பு, பில்லி சூன்யம் இவை நீங்கும்.

ஸ்ரீ வியாழ பகவான்:-ஸ்ரீப்ருஹஸ்பதிகுரு

ஆங்கீரஸ கோத்திரரும், தேவரும், சிந்து நாட்டினரும், நான்கு கையிலும் தண்டம், கமண்டலம், அக்ஷசூத்திரம், வரஹஸ்தம் கொண்டவர். பொன்னிற மேனிவர். மஞ்சளாடை, புச்சு, புஷ்ப ராக மாலை அனிந்து எட்டு பாண்டர நிறக் குதிரைகள் பூட்டிய தேரில் அமர்ந்து மேருவை வலம் வருபவர். சூரியனுக்கு வடக்கில் நீளமான சதுர மண்டலத்தில் பொன் வடிவமாக வடக்கு முகமாக இருப்பவர், இந்திரனையும், பிரம்மனையும் வழிபட இவர்க்கு மகிழ்ச்சி.

ஸ்ரீ வியாழன், குரு என்றும் வழங்கப்படுவார் ஆண்மைக் குணம், சுபகிரகம். ஒளி பொருந்திய மஞ்சள் நிறம். கிரக ரத்னம் புஷ்ப ராகம். மதப்பற்று, தெய்வபக்தி, வேதாந்த மனப்பாண்மை, எதிர் கால சந்ததியைக் குறிக்கிறுர். ஜாதகத்தில் தோஷங்கள் இருந்தால் இவரது பார்வையோ, சம்பந்தமோ ஏற்படில் தோஷ நிவர்த்தி ஏற்படும். குரு பார்க்கில் கோடி நன்மை என்ற பழமொழியுண்டு. குரு தன புத்திரக்காரன். ஒவ்வொரு ராசியிலும் ஒரு வருஷம் சஞ்சரிக் கின்றுர் தனுர் ராசியும், மீனமும் சொந்த வீடு கடக ராசியில் 5° உச்சம்.

ஜாதகத்தில் குரு உச்சமாக இருந்தால் பிறருக்கு தலைமை தாங்குபவர், பலவான் பிறரை ஆதரிப்பவர் முன் கோபம் உள்ளவர்கள். குரு திசைக்கு சாந்தி வால்மீகி ராமாயணம் சுந்தர காண்டம் முதல் சர்க்கம் அனுமான் கடலைத் தாண்டும் பகுதி பராயணமாகும்.

குருவுக்கு கிரக	பாஷை	சமஸ்கிருதம், தெலுங்கு.
,,	நிறம்	மஞ்சள்
,,	வடிவம்	நெடியர்
,,	லிங்கம்	ஆண்
,,	பிணி	வாதம்
,,	திக்கு	வடக்கு
,,	ஜாதி	பிராமணர்
,,	குணம்	சௌமியர்
,,	வஸ்திரம்	மஞ்சள்
,,	ரத்தினம்	புஷ்பராகம்
,,	தான்யம்	கடலை
,,	புஷ்பம்	முல்லைப் பூ
,,	சமித்து	அரசு
,,	தேவதை	பிரம்மன்
,,	வாகனம்	யானை
,,	சுவை	தித்திப்பு
,,	உலோகம்	பொன்.

ஸ்ரீ வியாழ (குரு) பகவான் வணக்கம்:-

மறைமிகு கலைநூல் வல்லோன் வானவர்க்காசான் – மந்திரி
நறை சொரி கற்பகப் பொன்னுட்டினுக் கதிபனாகி,
நிறை தனஞ் சிவிகை மண்ணினீடு போகத்தை நல்கு,
மிறையவன் குரு வியாழ மிருமலர்ப் பாதம் போற்றி, போற்றி

ஜீவஸ் சாங்கிர கோத்ர ஜோத்தரமுக
ஸ்சாஸ் வாத்த ஜேத்ம : ஸீப :
ஸ்தாதா சோத்தரஸ்ச ஸிந்து ஜனித :
சா போத மீனுதிய :
ஸீர்யேந்து க்ஷிதிஜப்ரியோ புதஸிதௌ
ஸத்ரு ஸமாஸ் சாபரே
ஸப்தாஸ்க த்விஜவத்பித : ஸூபகர :
குர்யாத் ஸதா மங்களம்.

ஸ்ரீ குரு பகவானை (வியாழ) வழிபட்டால் எல்லா அபிஷ்டங்களையும், ஜயத்தையும் யாவராலும் பூஜிக்கத் தகுந் தவரும் இதய நோய், வயிற்றுவலி நீண்டகால வாழ்வையும் பெறுவர்.

ஸ்ரீ சுக்கர பகவான்:-

பார்க்கவ கோத்திரரும் தேவருமான போஜ நாட்டினர் நான்கு கைகளிலும் தண்டம், கமண்டலம், அக்ஷசூத்திரம் வரஹஸ்தம், வெண்ணிற ஆடை உடுத்தி பூ பூச்சு வயிர மாலை அணிந்து எட்டு வெண் குதிரை பூட்டிய தேரில் வெண் கொடியின் கீழ் அமர்ந்து மேருவை வலம் வருபவர். சூரியனுக்கு கிழக்கில் பஞ்ச கோண பீடத்தில் வெள்ளி பிரதிமையாக கிழக்கு முகமாக வீற்றிருப்பவர். இந்திரனையும், பிரம்மனையும் வழிபட இவருக்கு மகிழ்ச்சி.

ஜோதிட பிராகாரம்:-

ஸ்ரீ சுக்கிரன் பெண்மைக் குணம், வெள்ளை நிறம், நன்மை செய்பவர். கிரக ரத்னம் வைரம். ஜாதகத்தில் மனைவி காதல், குடும்பத்தில் ஆனந்தம், ஆண்மை பலம், சம்போகம், காமம் இவற்றைக் குறிக்கும். இவர் இருப்பிடங்கள் அந்தப் புரங்கள் படுக்கையறை, விபச்சார விடுதில். ஒவ்வொரு ராசியிலும் ஒரு மாதம் சஞ்சரிக்கிறார்.

வாகன களத்திரகாரன் ரிஷபமும் துலாமும் சொந்த வீடு மீனத்தில் 27° உச்சம் ஜாதகத்தில் சுக்கிரன் உச்சனானால் தர்ம சிந்தனையுடனும், நீண்ட வயது வாழ்பவர்களாயும், திறமை மிகுந்தவர்களாகவும் இருப்பார்கள். சுக்கர திசைக்கு சாந்தி வால்மீகி ராமாயணம் பாலகாண்டம் 73வது சர்க்கம் ஸ்ரீ சீதை விவாஹப் பிரயாணமாகும்.

ஸ்ரீ சுக்கரனுக்கு கிரக	பாஷை	சமஸ்கிருதம் தெலுங்கு
,,	நிறம்	வெள்ளை
,,	வடிவம்	சமன்
,,	லிங்கம்	பெண்
,,	பிணி	சேத்துமன்
,,	திக்கு	கிழக்கு
,,	ஜாதி	பிராமணன்
,,	குணம்	சௌமியர்
,,	வஸ்திரம்	வெண்பட்டு
,,	ரத்தினம்	வைரம்
,,	தான்யம்	மொச்சை
,,	புஷ்பம்	வெந்தாமரை
,,	சமித்து	அத்தி
,,	தேவதை	லஷ்மி
,,	வாகனம்	கருடன்
,,	சுவை	தித்திப்பு
,,	உலோகம்	வெள்ளி.

ஸ்ரீ சுக்கரபகவான் வணக்கம் :

"மூர்க்கவான் சூரவாணன் முதலினோர் குருவாய் வையம்
காக்கவான் மழைபெய்விக்குங் கவிமகன் கனகமீவோன்
நீர்க்க வானவர் போற்றச் செத்தவர் தமையெழுப்பும்
பார்க்கவன் சுக்ராசாரி பாதபங்கயமே போற்றி போற்றி.

ஶுக்ரோ பார்கவ கோத்ரஜ: ஸிதநிப:
பூர்வாமுக பூர்வதிக்
மீனேச்சோ வ்ருஷதௌளி போபிச மஹா
ராஷ்ட ராதிபோ நங்கக்ருத்
இந்த்ராணி மகவாச லாஞ்சன ஸனிர்.
ஸௌம் யார்கி மித்ரம் ஸதா
ஷஷ்டத்ரிர் தஸவர் ஜுதே ப்ருகுஸுத:
குர்யாத் ஸதா மங்களா !!

ஸ்ரீ சுக்கிர பகவானை வழிபட்டால், பசுவின் சாபம், சுமங்கலி சாபம். ஸுவர்ணங்களும், ரத்னங்களும், ராஜ்யலாபம், வியாபார லாபம், உத்தியோக லாபம், தம்பதிகளின் ஒற்றுமை பெறுவர் ஸ்ரீ பரத்வாஜ முனிவர் அறிந்து உபதேசித்துள்ளார்.

ஸ்ரீ சனிஸ்வர பகவான் :

காசிய பகோத்திரரும், தேவரும், சௌராஷ்டிர நாட்டினரும் நான்கு கைகளிலும் வில், அம்பு, கத்தி, அபய ஹஸ்தங்களுடன் கருப்பான உருவத்துடனும் கரிய ஆடை, பூ, சாந்து இந்திர நீலமணிமாலை அணிந்து 8 களிகள் பூட்டிய தேரில் கறுப்புக்கொடியின் கீழ் அமர்ந்து மேருவை வலம் வருபவர். சூரியனுக்கு மேற்கில் வில்வ வடிவ மண்டலத்தில் இருப்பு பிம்பமாக மேற்கு முகமாக வீற்றிருப்பவர். பிரசாபதி, யமன், ஸ்ரீவெங்கடாசலபதி, அனுமாரையும் வழிபட்டால் இவருக்கு மகிழ்ச்சி.

ஜோதிட பிராகாரம் :

ஸ்ரீசனிஸ்வர பகவான் கொடிய குணமுள்ள, கருப்புநிற அலி கிரகம், ஜீவனம், மனஉறுதி, துக்கம். கஷ்டம், சூதாட்டம் சுவாச சம்பந்தமான வியாதிகள் குறிப்பவர். கிரக ரத்னம் நீலம். ஒவ்வொரு ராசியிலும் $2\frac{1}{2}$ வருடம் சஞ்சரிப்பவர். சனி ஆயுள் காரகன். மகரமும், கும்பமும் சொந்த வீடு. துலாத்தில் 20° உச்சம் ஜாதகத்தில் சனி உச்சமாக இருந்தால் சாமார்த்திறசாலிகள். நீண்ட ஆயுள், மனைவியிடத்தில் அன்பு கொண்டவர்களாகவும், தர்ம சிந்தனையுள்ள செல்வந்தர்களாகவும் இருப்பார்கள்.

சனி திசைக்கு சாந்தி வால்மீகி ராமாயணம் பாலகாண்டம் 30வது சர்க்கம் விசுவாமித்ர யாக ஸம்ரக்ஷண பாராயணமாகும்.

ஸ்ரீசனிஸ்வர பகவானுக்கு	கிரகபாஷை	அன்னிய பாஷை
,,	நிறம்	கறுப்பு
,,	வடிவம்	குறியர்
,,	லிங்கம்	அலி
,,	பிணி	வாதம்
,,	திக்கு	மேற்கு
,,	ஜாதி	சூத்திரர்
,,	குணம்	குரூரர்
,,	வஸ்திரம்	கறுப்புப்பட்டு
,,	ரத்தினம்	நீலம்
,,	தான்யம்	எள்ளு
,,	புஷ்பம்	கருங்குவளை
,,	சமித்து	வன்னி
,,	தேவதை	எமன்
,,	வாகனம்	காகம்
,,	உலோகம்	இரும்பு

ஸ்ரீ சனிஸ்வர பகவான் வணக்கம்:

முனிவர் கடவரேனும் மூர்த்திகண் முதலிஞேர்கள்
மனிதர்கள் சகல வாழ்வுடன் மகிமையல்லாத துண்டோ
கனிவுள தெய்வம் நீயே கதிர்சேயே காகமேறுஞ்
சனியனே யுனைத்துதிப்பேன் நமியனெற்கருள்
செய்வாயக:

மந்த: க்ருஷ்ணருசி: ஸபஸசிமமுக:
ஸௌராஷ்ட்ரா: காஸ்யப:
ஹயா யுஷ்க்ருந் ம்ருககும் போஸ¬பபல:
ஷட்த்ரிஸ்த ஸௌக்ய ப்ரத:
வக்ர: கோந்த்ரபதிர் மஹாஸ¬பபலோ
தேவோ தனுஷ் யாஸனே
ஸத்தானம் பஸ்சிமதிக் பரஜாபதிரஸென
குர்யாத் ஸதா மங்களம்.

ஸ்ரீசனிஸ்வர பகவானை வழிபட்டால் கோரிய எல்லாப் பொருள்களும் கிட்டிடும். சனி நீசனுகவோ, தோஷமுள்ளதாகவும் புத்திர ஸ்தான தோஷம் இருந்தாலும் விலகும். கோசாரரீதியாய், 1, 2, 8, 12 இடங்களில் இருந்தால் ஜீவனத்துக்கு கூட கஷ்டம். வழுக்கி விழுதல், கை, கால், தலை, இடுப்பு அடிபடுதல் ஏற்படக்கூடும். அவைகளும் நீங்கும்.

श्री शनैश्वर कीर्तनं

रागं : हिंदोलं   तालं : आदि

पल्लवि

काकवाहनं भजेहं सदा
पाकशासनाद्रि न्दितं (काक)

अनुपल्लवि

रागद्वेषरहितं रविसुतं
योगविशारदं भोगपदं शनिं (काक)

चरणं

नळपुरूरवादि भूपति शोघकं
निलयं श्री च्रोळागम पुर्यीं
मलहर वेगवदी तट मण्डितं
कुलवृद्धिकरं दार्घायुः प्रदं (काक)

— श्री लक्ष्मणकृतं

ஸ்ரீ சனீச்வர கீர்த்தனை

ராகம் ஹிந்தோளம்   தாளம் ஆதி

பல்லவி

காகவாஹனம் பஜேஹம்ஸதா
பாகசாஸனுதி வந்திதம் (காக)

அனுபல்லவி

ராகத்வேஷ ரஹிதம் ரவிஸுதம்
யோகவிசாரதம் போகப்ரதம்சனிம் (காக)

சரணம்

நளபுரூரவாதி பூபதி சோதகம்
நிலயம் ஸ்ரீ சோளா கமபுர்யாம்
மலஹர வேகவதீதட மண்டிதம்
குலவிருத்திகரம் தீர்க்காயுப்ரதம் (காக)

ஸ்ரீ லக்ஷ்மண க்ருதம
பழுர்

ஸ்ரீ சரசுவாமி துணை

பந்தமுடன் வினைதீர்க்க ப்பரிதிக்கும்
நிழலுக்கும் மகவாய் வந்து
அந்தமுடன் கழுகரசன் வாகனமாய் அமர்ந்து
வருணதிசை நோக்கி நிற்கும்
சுந்தரமாய் வில்லம்பு கதையுமேந்தி திருக்கரத்தால்
அபயமளித்தாதரிக்கும்
மந்தனெனும் சனிபகவான் மலர்த்தாள்கள் பிடித்து
இன்பமெய்துவோமே
தென்னைகள் சூழ்ந்தகாவும் சலமிகு வைகையாறும்
மன்னவன் சோழன் முன்னுள் மனம்மகிழ் சோழ
வந்தான்
தன்னிலே கோவில் கொண்ட சனிபகவானின் தாளில்
உன்னியே மலர் பொழிந்தால் ஓடிடும் வினைகள்
தீர்க்கும்

ஸ்ரீ கண்ணபிரான் அய்யங்கார்
சோழவந்தான்

இராகு பகவான்:

பைடினசி கோத்திரரும், ஸிம்ஹிகையின் புத்திரரும் பர்பல நாட்டினர் நான்கு கையிலும் கத்தி, சூலம், வரஹஸ்தங்களுடன், கார்வண்ண மேனியும், புள முகத்துடனும், கருஞ் சிங்கம் பூட்டிய தேரில் கறுப்புக் கொடியின் கீழ் அமர்ந்து மேருவை இடம் வருபவர். மற்ற கிரஹங்கள் வலம் வரும். ராகு, கேது இடம் வருவதனுல் தான் அவர்கள் பெயர்ச்சியின் போது அப்பிரதக்ஷணமாக வருகின்றுர்கள். சூரியனுக்கு தென் மேற்கில் முறத்தின் அமைப்பில் உள்ள பீடத்தில் பித்தளை வடிவில் தெற்கு முகமாக வீற்றிருப்பவர். நாகதேவதையும், காலனையும் வழிபட இவருக்கு மகிழ்ச்சி.

ஜோதிட பிராகாரம்:

ராகு குரூர சுபாவமுள்ளவர். பெண்மை குணம், கறுப்பு நிறம், உள்ள ஜாதகத்தில் லஞ்சம், தொத்து நோய்கள், துறவு, இவற்றைக் குறிக்கும். கிரகரத்னம் கோமேதகம். ஒவ்வொரு ராசியிலும் 1½ வருஷம் சஞ்சரிக்கின்ருர். ஞான மோக்ஷகாரன். இவருக்கு சொந்த வீடு என்பது கிடையாது. ஆனுல் ரிஷபத்தில் 20° உச்சம். ஜாதகத்தில் ராகு உச்சமானுல் செல்வம் நிறைந்தவர்களாக இருப்பார்கள்.

ராகு திசைக்கு சாந்தி வால்மீகி ராமாயணம் 75வது சர்க்கம் லங்கா தகனம் பாராயணமாகும்.

ஸ்ரீராகுவுக்கு	கிரகபாஷை	அன்னிய பாஷை
,,	நிறம்	கறுப்பு
,,	வடிவம்	நெடியர்
,,	லிங்கம்	அலி
,,	பிணி	பித்தம்
,,	திக்கு	தென்மேற்கு
,,	ஜாதி	சங்கிரமஜாதி
,,	குணம்	சௌமியர்
,,	வஸ்திரம்	கறுப்பு வஸ்திரம்
,,	ரத்தினம்	கோமேதகம்
,,	தான்யம்	உளுந்து
,,	புஷ்பம்	மந்தாரை
,,	சமித்து	அலுகு
,,	தேவதை	பத்ரகாளி
,,	வாகனம்	ஆடு
,,	சுவை	புளிப்பு
,,	உலோகம்	கருங்கல்

ஸ்ரீ இராகு பகவான் வணக்கம்:-

வாகு சேர் நெடுமான் முன்னம் வானவர்க்க முத மீயப்,
போகு மக்காலே யுன்றன் புணர்ப்பிஞற் சிரமே யற்று,
பாகுசேர் மொழியாள் பங்கன், பரன்கையில் மீண்டுபெற்ற,
ராகுவேயுனேத் துதிப்பேன் இரட்சிப்பாய், இரட்சிப்பாய்.''

ரா ஹுஂ ஸுஂம் ஹஸ் தேஸ போ நிர்ருதி :
க்ருஷ்ஞங்க ஸுர் பாஸன :
ய : பைடினஸ கோ த்ரஸம்பஸ மித்
தூர் வாமுக்கா தக்ஷிண :
ய : ஸர்போ ப்யதி தைவதோ நீர்ருதி :
ப்ரத்யாதி தேவ : ஸதா
ஷட் த்ரி ஸ்த்த : ஸீ பக்ருச்ச ஆம் ஹக ஸீத
குர்யாத் ஸதா மங்களம்!!

ஸ்ரீ இராகு பகவானே வழிபட்டால் ஜாதகத்தில் நீசஞகவோ, புத்ர ஸ்தானம் தோஷம் கோசர ரீதியாய் 4, 9 இடங்களில் கெட்ட பலனே தடுத்து தசாபுத்தி காலங்களில் விஷ பீடை ஏற்படுவது தடுக்கலாம்.

ஸ்ரீ கேது பகவான்:-

ஜைமினி கோத்திரரும், ஸிம்ஹிகையின் குமாரரும், மத்திய நாட்டினரும் இரு கையிலும் கதை, வரம் கொண்டவரும், புகை நிறைந்தவரும் பல நிற ஆடை, பூ பூச்சுடன் வைடூரிய மணி மாலை அணிந்து, பல நிறங்கள் கொண்ட புருக்கள் பூட்டிய தேரில் பல நிறக் கொடிகளின் கீழ் அமர்ந்து மேருவை இடம் வருபவர். சூரியனுக்கு வடமேற்கில் கொடி உருவ மண்டலத்தில் வெண்கலம் பிரதிமையில் தெற்கு முகமாக வீற்றிருப்பவர். பிரம்மனையும், சித்திர குப்தனையும் வழி பட்டால் மகிழ்ச்சிக் குறியவர்.

ஜோதிட பிரகாரம்:-

ஸ்ரீ கேது கொடிய தன்மையுள்ள அலி கிரகம், மதப்பற்று, தீர்த்த யாத்திரை, கர்வம், சுயநலம் பில்லி, சூன்யம், மந்திரவாதி இவைகளைக் குறிக்கும் கிரகம் ரத்னம் வைடூரியம், ஒவ்வொரு ராசியிலும் ஒன்னரை ($1\frac{1}{2}$) வருஷம் காலம் சஞ்சரிக்கும். மாதாமை காரகன் இவருக்கு சொந்த வீடு இல்லை. ஆனால் விருச்சிக ராசியில் 20° உச்சம். ஜாதகத்தில் உச்சமானல் செல்வம் நிறைந்தவர்களாக இருப்பார்கள்.

கேது திசைக்கு சாந்தி வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டம் 50வது சர்க்கம் குகன் சந்திப்பு பாராயணமாகும்.

ஸ்ரீ கேதுவுக்கு	கிரக பாஷை	அன்னிய பாஷை
,,	நிறம்	சிவப்பு
,,	வடிவம்	நெடியர்
,,	லிங்கம்	அலி
,,	பிணி	பித்தம்
,,	திக்கு	வடமேற்கு
,,	ஜாதி	சங்கிரம ஜாதி
,,	குணம்	குரூரர்
,,	வஸ்திரம்	பலவர்ணவஸ்திரம்
,,	ரத்தினம்	வைடூரியம்
,,	தானியம்	கொள்ளு
,,	புஷ்பம்	செவ்வல்லி
,,	சமித்து	தர்பை
,,	தேவதை	இந்திரன்
,,	வாகனம்	சிங்கம்
,,	சுவை	புளிப்பு
,,	உலோகம்	துருக்கல்

ஸ்ரீ கேது பகவான் வணக்கம்:-

பொன்னைய னுரத்திற் கொண்டோன் புலவர்தம் பொருட்டாலாழி
தன்னையே கடைந்து முன்னந்தண்ண முதளிகலுற்ற.
பின்னே நின் காவானுண்ட பெட் பினிற்சிரம் பெற்றியந்தா,
யென்னையான் கேதுவே யிவ் விரு நீலம் போற்றத்தானே.

கேதுர் ஜைமினி கோத்ரஜ; குஸஸமித்
வாய்வ்ய கோணே ஸ்திதி
சித்ராஸ்கத் வஜ லாஞ்சனோ ஹி பகவான்
யோ தக்ஷிணு ஸாமுக:
ப்ரஹயா சைவது சித்ரகுப்த ஸீமுச:
ப்ரத்யாதி தேவ: ஸதா
ஷட்த்ரிஸ்த: ஸீபக்ருச்ச பர் பரபதி:
குகயாத் ஸதா மங்களம்.

ஸ்ரீ கேது பகவானை வழி பட்டால் கேது 1, 5, 9, இடங்களில் இருப்பதால் ப்ராமண சாபம், எல்லா ரோகங்களும், துக்கங்களும், ஸாதுக்கள் சேர்க்கை தீர்த்த யாத்திரை நன்மை நடக்கும்.

வைஷ்ணவர்கள் விஷ்ணு ஆலயங்களில் சில இடத்தில் தான் நவக்கிரஹ பிரதிஷ்டை செய்து யிருப்பார்கள். நவக்கிரஹங்களுக்கு பதிலாக தசாவதார பிரதிஷ்டையும், ஸ்ரீ சக்கரத் தாழ்வாரும் வைத்து வழிபடுவார்கள். இவரை சேவித்துப் பிரதக்ஷிணம் செய்து வந்தால் சகல தோஷங்களுக்கும் பரிகாரம் கிடைக்கும் ஸ்ரீ மற்றிக மாந்தமகா தேசிகன் பாசுர மியற்றி யிருக்கின்றார். இதைத் தினமும் அநுஸந்தித்து வந்தால் ஸகல வகைத் தோஷங்களும் நீங்கும். பில்லி, சூன்யம், ஏவல் யாவும் நம்மை நெருங்கிடாது. நோய் நொடிகளும் வராது—

தேசிகப் பிரபந்தம் பரமதபங்கம் - 54.

1. திகரி மழவுயர் குந்தந் தண்டங்கு சம்பொறி
   சிதறு சதமுக வாங்குவாள் வேல மர்ந்ததும்
   தெழி பணில சிலை கண்ணி சீரங்க செவ்விடி
   செழிய கதை முசலந்தி சூலந் திகழ்ந்ததும்.
2. அகில உலகுகள் கண்டையா யோரலங்களில்
   அடைய வடை விலிவங்க வாசின்றி நீன்றதும்
   அடியுமருகணையுமர வாமென்ன நின்று அடி
   யடையுமடி யரையன் பிஞலஞ்ச லென்பதும்.
3. மகில மமரர் கணங்கள் வானங் கவர்ந்திட
   மலியுமசுரர் புணர்ந்த மாயந் துரந்ததும்
   வளருமணி மணிமின்ன வானந்தி கொண்டிட
   மறை முறை வணங்க மாறின்றி வென்றதும்.
4. சிகியிரவி மதிய முமிழ் தேசுந் வெண்டிசைத்
   தினிமருள் செகவுகந்து சேமங்கள் செய்ததும்
   திகழரவணை யரங்கா தேக்கென்ன மன்னிய
   திரிசு தரிசனர் செய்ய வீரரென் புயங்களே!!

தசாவதார ஸ்தோத்ரமும் நவக்ரஹ ப்ரீதியும்

ராமாவதார: ஸூர்யஸ்ய சந்திரஸ்ய யது நாயக:!
ந்ரு ஸிம் ஹோ பூமி புத்ரஸய ஸௌம்ய: ஸோம
ஸுதயஸ்ச !!
வாமநோ விபு தேந்த்ரஸ்ய பார்கவோ பார்க வஸ்யச!
கூர்மோ பாஸ்கர புத்ரஸ்ய ஸைம் ஹி கேயஸ்ய ஸுகர:
கேதுர் மீ நாவ தாரஸ்யயே கே சாந் யேபி கேசரா:

இதை பிரதி தினமும் பாராயணம் செய்பவர்களுக்கு கிரஹங்களால் ஏற்படக் கூடிய இன்னல்கள் நீங்கி மேன் மேலும் நன்மையே உண்டாகும்.

மனம்

மனமே தான் மனிதன்

மனதை ஜலத்திற்கு ஒப்பிடலாம். ஜலத்திற்கு எவ்வித நிறம் கிடையாது. மனத்திற்கு நிறம் கிடையாது பளிங்கு போன்றது.

ஜலத்தில் கலத்தில் கலப்படம் செய்தால் அதன் குணம், ருசி, நிறம், மணம், சுவை மாறிவிடுவது போல் மனதில் நல்லவை, கெட்டவை இவற்றில் எதற்கு இடம் அளிக்கப்படு கிறதோ அதற்கேற்ப மனம் மாறிவிடுகிறது.

மனோபாவத்திற்கு கேற்ப உணர்ச்சிவசப்பட்டு அங்கங்கள் செயல்படுகின்றன. இந்த உத்வேகமானது உத்தேச்ய விஷ யத்தில் பலனடைய ஆசையைத் தூண்டி விடுகிறது. இப்படி யானதுமே இவ்விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள உள்ளத் தில் இதற்கான யுக்தி யோசனைகள் பிறந்து அதற்கேற்ப செய்கைகள் மாறுகிறது. எதையும் செய்யத் துணிந்துவிடுகி ரோம்.

மனிதர்களின் மனப்போக்கை மேகத்திற்கு ஒப்பிடலாம். மேகமானது அது இறங்குகிற துறையிலேயே மென்மேலும் பெய்து கொண்டே போகும். இதைப்போல தான் மனிதர் களின் மனமும் அது போகிற போக்கிலேயே செல்கிறது. துறை யிலேயே மென்மேலும் சென்றுகொண்டேயிருக்கும். ஆனல் இந்த போக்கை ஏதாவது ஒருநாள் ஒரு சந்தர்ப்பத்தில் பகுத் தறிவைக்கொண்டு நல்ல துறையில் அவரவர்கள் மனப் போக்கை நல்வழியில் திருப்பிவிடலாம். ஆனல் மேகம் அப்படியல்ல இதுதான் மேகத்திற்கும், மனிதர்களின் மனப் போக்கிற்கும் உள்ள வித்தியாசம்.

"மனம் ஏவ மனுஷ்யாணும்
மன ஸத்வம் யத்பாவம் தத்பவதி",

மனம் எதை விரும்புகிறதோ அதை அடைகிறது. மனமேதான் மனிதன்.

ஓம் நமோ நாராயணுய.

சாஸ்திரங்கள் ஆறு வேதாங்கங்கள்

1. சிக்ஷை

(சிக்ஷாம் வ்யாக்யாஸ்யாம:)
(வேதப் ரமாணம் உப நிஷது)

சொற்கள் உச்சரிக்கும் வகையைச் சேர்ந்த நூல்கள் சப்தம் ஓசை வேதத்தினின்று இதை சரி செய்தார்கள் என்று தெரிகிறது.

2. வியாகரணம்:

இலக்கண நூல்கள், நவவ்யாகாரணம், பாணினி சூத்திரம் பதங்களை இணைத்தல் ஆராய்ச்சி.

3. சந்தஸ்:

வேத மொழிகளின் கோர்வை நேர்மை செய்யுள். அதன் சப்தம் (ஓசை) ஸ்வரம் நடை இவைகளை விளக்கும் நூல்கள்.

4. ஜ்யோதிஷம்:

வான சாஸ்திரம், கணித பாகம், சல்யம், கிரக நிர் மாணம், ஆருடம், முகூர்த்தங்கள், மனை, இதற்கான நூல்களாகும்.
வேதத்தில் வான சாஸ்திர விளக்கம் இதன் சூக்ஷமங்கள் பற்றி பல உண்டு.

5. நிருத்தம்:

வேத சம்பந்தமான மொழிகளை விளக்கும் சப்த உச்சரிப்பு, வகை, கனம், ஜடை, ரிஸ்வில், கமகம், ஸ்வரம், உதாத்தம், அநு தாத்தம், ஸ்வரிதம், தீர்க்கம், பஞ்சமம், ஷட் ஜமம், நிஷாதம், காந்தாரம், உச்சஸ்தாயி, மத்யஸ்தாயி, அந்தரஸ்தாயி, இது சங்கீதப் பிரிவைச் சேர்ந்தது.

6 கல்பம்:

யாக யக்ஞாதிக்ளைச் செய்தல். இதை செய்ய வேண்டிய விபரங்கள், விதி முறைகள் விளக்குவது.

இவை வேதாங்கங்கள் ஆறு சாஸ்திரங்கள் ஒவ்வொன்றும் வேத புருஷனுக்கு ஒவ்வொரு அங்கமாக கூறப்படுகிறது.

1. பாதங்கள் கைகள், 2. மார்பு 3. கண்டம்
4. நேத்திரம் 5. நாசி, நெற்றி 6. சிரஸ்இவ்ஹமா

இவைகளின் இயல்புகளாலும் உதவியாலும் பகுத்தறிவுகள் உண்டாகி மனதை நல்ல வழியில் திருப்ப ஸந்தர்ப்பங்கள் ஏற்படுகிறது.

"லோகோ பின்னருசி பின்ன ருசி" என்றபடி உலகில் ருசி, விருப்பம் கொள்கை இவையெல்லாம் ஒருவருக்கு இருப்பது போல் மற்றவருக்கு இருப்பதில்லை. இராது. இருக்கவும் முடியாது எனவே இந்த பத்தாயிரம் நூலைப் படிப்பவர்களில் இதில் ருசி யுடையவர்கள் இனியும் இதைக் கொண்டு தான் ஆண்டவனைத் தெரிந்து கொள்ள வேண்டுமென விரும்புவர்கள் இதையும் படித்துப் பார்க்கலாம். இனி வெளி வரும் நூலையும் பார்க்கலாம். அப்படிப் பட்டவர்கள் தொடர்ந்து படித்துப் பார்த்து பலனடையட்டும். சகல மங்களமும் இதனால் இவர்களுக்கு உண்டாகட்டும்.

சர்வேஜனா : சுகினோபவந்து

அடியேனுடைய நோக்கம், ஒன்றே ஒன்றுதான் முதலில் கூறியபடி அடுத்த மதத்தின் ஒரே குறிக்கோள் படி மதப் பற்று, மதசேவை என்று செய்து வருவது போல் என்னுடைய ஆத்மா உள்ள வரையிலும் ஆதிபராசக்தியின் அருள் உள்ள வரையிலும் இப் பணியை அதாவது நம் ஹிந்து

தர்ம விளக்கம், பண்டிகைகள் விபரம் எனது சக்தியுள்ள யளவுக்கு இம்மாதிரியான நூல்களை இல வசமாக வெளியிட்டு பக்தர்களை பலனடையச் செய்ய வேண்டு மென்பதே எனது குறிக்கோள்.

இப்படிக்கு,
மீனாக்ஷி இராமன் (ஸ்வாமி)
C/o. ராணி பர்னிச்சர்
21. மேலாவணிமூலவீதி, மதுரை.

நவக்ரஹங்களில் நடுநாயகம்.

தஞ்சை ஜில்லாவில் நவக்ரஹங்களின் நடு நாயகம் உள்ளது.

சூரியனார் கோயில்	(சூரியன்)
இந்தளூர்	சந்திரன்
வைதீசுவரன் கோயில்	செவ்வாய்
திருவெண்காடு	புதன்
ஆலங்குடி	குரு
திருவென்னியங்குடி	சுக்கிரன்
திருநள்ளாறு	சனி
ஸ்ரீவாஞ்சியம்	ராகு, கேது

இந்த ஒன்பது கிரகங்களும் அனுக்ரஹம்பெற்ற ஸ்தலங்களாக விளங்குகின்றன.

உலகை, ஒழுங்குமுறையில் இனிது நடத்திவரும் அமைப்புக்கள் பற்பல. அவைகளுள் உயிர்ப்பாய்தமாய் திகழ்வது ஒன்று. அது நூல் என்பது. நூலின் உள்ளுரை யாது? அறிவு. ஆதலின் நூல் அமைப்பை அறிவுச் சுரங்கம் என்று கூறலாம். இதை ஓர் சுழலும் நூல்போல உபயோகித்தால் பல ஆயிரக்கணக்கானபேர்கள் கையில் இது கை மாரிக்கொண்டே இருக்கும். இதற்கு காரணம் அடியேன் சக்திக்கு உட்பட்ட பத்தாயிரம் பிரதிகள் இப் பாரத பூமியில் சதுர்வர்ண ஸமூகத்திற்கும், கோடிக் கணக்கான ஆஸ்திக கன தனவான்களுக்கும் அறிவு சுரங்கமாக விளங்கும். இதற்கு பக்தர்கள் ஒத்துழைப்பை எதிர்நோக்கியுள்ளேன். இவ் விழுமிய நூலைச் செவ்விய முறையில் யாத்து உதவிய சிரஞ்சீவி மு. ராமதாஸ் என்பவருக்கும், திரு புலவர், ஆனந்தராஜ் அவர்களுக்கும். மதுரை ஸ்ரீ ராமகிருஷ்ண பிரஸ் உரிமையாளர் பிரும்மஸ்ரீ சு. ராமமூரத்தி அய்யர் அவர்களுக்கு ஸகல ஸம்பத்துகளும் தீர்க்க ஆயுளையும் அளிக்குமாறு எல்லாம் வல்ல சக்தியை பிராத்தித்து கொள்கிறேன்.

இப்படிக்கு
ஸ்வாமி